# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்:100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 0083/2017/ந

ஆணை எண்: 164/2017

நாள்: 20/06/2017

திரு. A.P. வெங்கடாசலம்,
34, மாதேஸ்வரன் கோவில் தெரு,
கோபிசெட்டிபாளையம்,
ஈரோடு மாவட்டம் - 638 452. — **முறையீட்டு மனுதாரர்**

நகராட்சி ஆணையர்,
கோபிசெட்டிபாளையம் நகராட்சி. — **எதிர் மனுதாரர்**

**ஆணை**

முறையீட்டு மனுதாரர் திரு. A.P. வெங்கடாசலம் என்பவரது முறையீட்டு மனு 17.4.2017 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்றது. இம்முறையீட்டு மனு எண்.0083/17 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்படி முறையீட்டு மனுவில் தான் குடியிருக்கும் பகுதியான கோபிசெட்டிபாளையம், மாதேஸ்வரன் கோவில் தெருவில் சாக்கடை வசதி செய்து தரப்படவில்லை என புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. கழிவுநீர் வெளியேற வசதி இல்லாததால் குட்டை போல் தேங்கி சுகாதார கேடு ஏற்படுவதாகவும், நகராட்சிக்கு பலமுறை முறையீடு செய்தும் சாக்கடை வசதி அமைக்கப்பட வில்லையென்றும் ஆனால் அருகிலுள்ள மற்றொரு பகுதியான சீதாலட்சுமிபுரத்தில் ஏற்கனவே பராமரிப்பில் இருந்து வரும் பழைய சாக்கடையை இடித்துவிட்டு புதிதாக சாக்கடை வசதி அமைக்கும் பணி நடைபெற்று வருவதாகவும் மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து நகாட்சி தரப்பிலான பதிலறிக்கையினை தாக்கல் செய்யுமாறு கோபிசெட்டிப்பாளையம் நகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண்.0083/2017/ந நாள்:19.04.2017ல் ஆணையிடப்பட்டது. மேலும் 30.05.2017 அன்று இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு ஆஜராகி விளக்கமளிக்குமாறு முறையீட்டு மனுதாரருக்கு அழைப்பாணையும் (மு.ம.எண்.0083/2017/ந நாள்:25.04.2017) அனுப்பப்பட்டது. கோபிசெட்டி பாளையம் நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்.1047/2017/இ1 நாள்:05.05.2017 இம்முறைமன்ற நடுவத்திற்கு 08.05.2017 அன்று வரப்பெற்றது. மேற்படி அறிக்கையில் கீழ்க்கண்டவாறான விளக்கங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன:-

"மனுதாரர் வசித்து வரும் வீடு உள்ள வரிசையில் ஐந்து வீடுகள் உள்ளன. இவ்வீதியில் மழைநீர் வடிகால் வசதி தற்போது இல்லை. மேற்படி வீதியில் முதல் இரண்டு வீடுகளின் (வடக்கிலிருந்து) கழிவு நீர் வடிகால் குழாய் நிலத்திற்கடியில் பதித்து அருகிலுள்ள வடிகாலுடன் இணைக்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள மூன்று வீடுகளின் உறிஞ்சுகுழி அமைக்கப்பட்டு விடப்பட்டு வருகிறது. மேற்படி தெருவில் சுமார் 100 மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்கப்பட வேண்டும். இப்பணியினை அரசிடமிருந்து திட்டப்பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வரும் போது முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும்... மேலும், மனுதாரர் குறிப்பிடும் சீதாலட்சுமிபுரம் வடிகால் கட்டுமானப் பணி சிறப்புச் சாலை திட்டம் 2015-16ன் கீழ் அரசிடமிருமிந்து நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு நகர்மன்றத்தால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதின் அடிப்படையில் இப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது...."

இதனிடையே 30.05.2017 அன்று இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு ஆஜரான முறையீட்டு மனுதாரர் முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள தனது முறையீடுகளை மீள வலியுறுத்தி வாக்குமூலம் தாக்கல் செய்தார். மேலும், அங்கீகாரம் பெற்ற மனைப் பகுதியில் அமைந்துள்ள தங்கள் பகுதிக்கும் வடிகால் வசதி அமைத்துத்தரப்பட வேண்டுமெனவும் தங்கள் பகுதிக்கு அருகிலுள்ள கோடீஸ்வரன் நகர், ரோஜா நகர் பகுதிகளில் சமீபத்தில் கட்டப்பட்ட

வீடுகளுக்கு வடிகால் வசதி செய்யப்பட்டுள்ளதெனத் தெரிவித்து சில புகைப்பட ஆதாரங்களையும் சமர்ப்பித்துள்ளார்.

நகராட்சி ஆணையரது அறிக்கையில் முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள பகுதிக்கு முன்னுரிமை அடிப்படையில் வடிகால் வசதி மேற்கொள்ளப்படுமென உறுதி அளிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், பொது மக்கள் நலன் கருதி துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென கோபிசெட்டிப்பாளையம் நகராட்சி ஆணையருக்கு வலியுறுத்தி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017–ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 20–ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. நகராட்சி ஆணையர்,
   கோபிசெட்டிபாளையம் நகராட்சி,
   கோபிசெட்டிபாளையம்,
   ஈரோடு மாவட்டம் - 638 452.

2. திரு. A.P. வெங்கடாசலம்,
   34, மாதேஸ்வரன் கோவில் தெரு,
   கோபிசெட்டிபாளையம்,
   ஈரோடு மாவட்டம் - 638 452.